**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.*452*** **நாள்: *07.12.2023***

இன்று *(07.12.2023)* மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு .கே.என்.நேரு அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலின் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பால், குடிநீர் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் விநியோகம், மின் விநியோகம் மற்றும் களப்பணி நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு, களப்பணி நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். பால், குடிநீர், உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை எவ்வித குறைபாடின்றியும் வழங்கிட வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தேங்கிய மழைநீரை அகற்றுவதோடு சீரான மின்விநியோகம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், தூய்மைப் பணிகளை தொடர்ந்து சிறப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும். போக்குவரத்திற்கு இடையூறின்றி செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் உள்ளிட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அலுவலர்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.ஹனீஸ் சாப்ரா, இ.ஆ.ப., மற்றும் காணொலிக்காட்சி வாயிலாக கண்காணிப்பு அலுவலர்கள், மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**